# வருடாந்த அறிக்கை
# 2016

# உள்ளடக்கம்


பக்கம்

**தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரின் செய்தி ..................... 3**

**தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் செயலாளரின் செய்தி ...... 4**

**தொழில் ஆணையாளர் நாயகத்தின் செய்தி ..................... 5**

**மேலதிக தொழில் ஆணையாளர் நாயகத்தின் செய்தி ..................... 6**

1. தொழில் திணைக்களம் ..................... 7
2. தொழில் அமைதி ..................... 10
3. சமூகக் கலந்துரையாடலும் வேலைத்தலக் கூட்டுறவும் ..................... 14
4. சம்பளங்கள் மற்றும் சேவை நிபந்தனைகள் ..................... 15
5. சமூகப் பாதுகாப்பு ..................... 17
6. தொழில்சார் பாதுகாப்பும் சுகாதாரமும் ..................... 20
7. பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரம் ..................... 21
8. திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீடுகள் ..................... 24
9. புள்ளிவிபரச் செயற்பாடுகள் ..................... 26
10. பொது நிருவாகம் ..................... 27
11. திணைக்களத்தின் முக்கியமான சாதனைகள் ..................... 30
12. புள்ளிவிபரத் தரவுகள் ..................... 31

# தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரின் செய்தி

தொழில் திணைக்களத்தின் 2016 ஆம் ஆண்டின் வருடாந்த முன்னேற்ற அறிக்கைக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது நாட்டிலுள்ள தனியார் மற்றும் பகுதி தனியார் துறையில் உள்ள 8 மில்லியனுக்கும் மேற்பட்ட ஊழியர்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்ற சட்டங்களையும் சட்ட மூலங்களையும் அமுலாக்குதல் உட்பட, கைத்தொழில் பிணக்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பதன் ஊடாக நாட்டில் கைத்தொழில் சமாதானத்தை பராமரித்தல், ஊழியர்களின் சேவை நிலைமைகள் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல் என்பன தொழில் திணைக்களத்தின் பிரதான பணிகளாகும். இதன் பிரகாரம், தொழில் தருநர்கள் மற்றும் ஊழியர்கள் இருதரப்பினரதும் நலன்களுக்காக தொழில் திணைக்களத்தால் ஆற்றப்படும் பணிகள் அளவிட முடியாதனவாகும்.

இவ்வருடம் தொழில் திணைக்களமானது, சர்வதேச தொழில் தாபனத்தின் உதவியுடன் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல், கைத்தொழில் பிணக்குகள் மற்றும் வேலை நிறுத்தங்கள் என்பவற்றின் எண்ணிக்கையைக் குறைத்தல், வரவு செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தை அமுல்படுத்துதல், அதே போல் சமூகக் கலந்துரையாடல் மேம்பாட்டின் ஊடாக தொழில் தருநர்கள் மற்றும் ஊழியர்களுக்கிடையில் சிறந்த உறவினை கட்டியெழுப்புதல் போன்ற விடயங்களில் தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது. இதன் பிரகாரம், முழு நாட்டையும் சிறுவர் தொழிலற்ற சுதந்திர வலயமாக மாற்றக் கூடிய முறையில் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. தொழில் திணைக்களமானது, கைத்தொழில் பிணக்குகளை குறைத்தல் மற்றும் சமூகக் கலந்துரையாடலை மேம்படுத்தும் நோக்கத்துடனும் வெகுனச ஊடகத்தின் உதவியுடன் பல விழிப்புணர்வு நிகழ்சிகளை நடாத்தியுள்ளது.

மேலும், ஊழியர்களின் ஓய்வுகால வாழ்க்கையை நன்மையடையச் செய்வதற்காக ஊழியர் சேமலாப நிதியத்தின் நன்மைகளின் 30% ஐ முற் கூட்டியே பெற்றுக் கொள்ளும் போற்றத்தக்க புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ் அனைத்துப் பணிகளை செய்து முடிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தொழில் அமைச்சின் செயலாளர், திணைக்களத்தின் தொழில் ஆணையாளர் அதிபதி மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் நன்றியுடையவனாக இருக்கின்றேன்.

**டபிள்யு. டி. ஜே. செனவிரத்ன**

*தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு*

# <u>தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் செயலாளரின் செய்தி</u>

சிறந்த வேலைச் சூழலை தாபித்து கைத்தொழில் சமாதானத்தை உறுதிப்படுத்துவதன் ஊடாக நாட்டின் அபிவிருத்திச் செயன் முறைக்கு பங்களிப்புச் செய்யும் நோக்கத்துடன் செயலாற்றிய தொழில் திணைக்களத்தின் 2016 ஆம் ஆண்டின் செயற்பாடுகளைக் கொண்டுள்ள ஆண்டு அறிக்கைக்கு வாழ்த்துச் செய்தியைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

சுதந்திரம் அடைந்ததன் பின்னர் இலங்கையின் தனியார் துறையானது படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் தற்போது இலங்கையின் பொருளாதாரத்திற்குப் பாரிய பங்களிப்பினை செய்வதில் தனியார் துறையின் பாரிய வேலையாளணி ஈடுபட்டுள்ளது. முன்பு மட்டுப்படுத்தப்பட்ட சேவையாக இருந்த பொதுத் துறைகளான பொதுப் போக்கு வரத்து, சுகாதார சேவைகள், கல்வி மற்றும் உயர்கல்வி போன்ற துறைகள் அடையாளங் காணப்பட்டு இவை தனியார் துறைகளாக ஆரம்பிக்கப்பட்டதுடன் இவை அதைப் போன்றே வெற்றிகரமாக நடாத்திச் செல்லப்படுகின்றன.

எனவே, தொழில் திணைக்களத்தின் தொழிற்பாடுகளின் தரங்களையும் அளவினையும் மேம்படுத்தும் தேவை ஏற்பட்டுள்ளதுடன், இது விசேடமாக ஊழியர்களின் தொழில், வேலைச்சூழல் மற்றும் தொழில் பாதுகாப்பு மற்றும் ஊழியர்களுக்காகத் தொழிற்படக் கூடிய ஒர் முக்கியமான நிறுவனமாக மாறியுள்ளது.

இந்த முயற்சியில், ஊழியர்களின் உரிமைகளுக்கான பாதுகாப்பு, ஊழியர்கள் மற்றும் தொழில் தருநர்களுக்கிடையில் பரஸ்பர புரிந்துணர்வை மேம்படுத்துதல் அதே போல் சட்டங்களை அமுல்படுத்துதல் மற்றும் ஊழியர்களுக்காக தொழில் திணைக்களமானது செயற்படுகின்றது.

இதன்பிரகாரம், தொழில் திணைக்களத்தின் 2016 ஆம் ஆண்டின் இலக்குகளை அடைவதற்கு தொழில் ஆணையாளர் அதிபதி எடுத்துக் கொண்ட தலைமைத்துவத்தையும் அதே போல் கிட்டத்தட்ட 2400 எண்ணிக்கையுடைய திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களினதும் பங்களிப்பிற்கு நன்றியறிதலுடன் அவர்களை பாராட்டுவதுடன், வாழ்த்தையும் கூறுகின்றேன்.

**எஸ். எம். கோட்டாபாய ஜெயரத்ன**
*செயலாளர்*
*தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு*

## தொழில் ஆணையாளர் நாயகத்தின் செய்தி

உறுதியான பொருளாதாரத்தைத் தாபிப்பதற்கு நாட்டிலுள்ள கைத்தொழில் சமாதானம் அவசியமான காரணியாகும். தொழில் தருநர்கள் மற்றும் ஊழியர்களுக்கிடையில் உள்ள ஒவ்வாமைகள் மற்றும் மனப்பாங்குத் தாக்கங்கள் பல விதமானமான பிரச்சனை நிலைமைகளை உருவாக்கும் என்பதுடன் இவ் வகையான தொடர்ச்சியான விளைவுகள் கைத்தொழில் சமாதானத்தினை தகர்க்கும் காரணிகளாக இருக்கக் கூடும் என்பதுடன் இதன் விளைவாக ஒட்டு மொத்த பொருளாதாரமும் பின்னடையக் கூடும்.

இதன்பிரகாரம், தொழில் நலன்புரி மற்றும் மேம்பாடு என்பவற்றிற்காக சட்டங்கள் மற்றும் கட்டளைகளை ஆக்கி அமுல்படுத்துதல், தொழில் பரிசோதனைகளை நடாத்துதல், தொழில் சமூகத்திற்கான சமுதாயப் பாதுகாப்பிற்கான நிகழ்ச்சிகளை அமுல்படுத்துதல் மற்றும் உரிய தரப்புகளுக்கு மத்தியில் சமூகக் கலந்துரையாடுதலை மேம்படுத்துதல் என்பவற்றின் ஊடாக கைத்தொழில் சமாதானத்தை தாபிக்கும் பாரிய பொறுப்பினை தொழில் திணைக்களமானது தன் தோள்களில் சுமக்கின்றது.

மேலும், காலணித்துவ சகாப்தக் காலத்தில் பிரதானமாக பெருந்தோட்டப் பொருளாதாரத்துக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்த இலங்கையில் தனியார் துறையின் தொழில் பிரிவானது படிப்படியாக அபிவிருத்தியடைந்து தற்போதுள்ள மிகப்பெரிய தொழில் அணி உருவாக்கப்பட்டு, இது நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகப்பெரும் அளவில் பங்களிப்பைச் செயகின்றது.

எனவே, தொழில் திணைக்களத்தின் செயற்பாடுகள் அளவிலும், தரத்திலும் உயர்த்தப்பட வேண்டும் என்பதுடன் தனியார் துறை ஊழியர்களின் தொழில் புரியும் சூழல் பாதுகாப்பு மற்றும் ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு என்பவற்றை வழங்கும் தொழில் திணைக்களமானது முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக தற்போது மாறியுள்ளது.

வலய, மாவட்ட மற்றும் உபதொழில் அலுவலகங்கள் அதேபோல் தலைமைத் தொழில் அலுவலகத்தின் பிரிவுகள் தொழில் திணைக்களத்தின் இலக்குகளை அடைவதில் 2016 இல் பல சவால்களுக்கு மத்தியில் முகம்கொடுத்த அர்ப்பணிப்புப் போற்றத்தக்கதாகும்.

மேலும், தொழில் அமைச்சிற்கும் மற்றும் சர்வதேச தொழில் ஸ்தாபனத்திற்கும் அவர்கள் எம்மை ஊக்குவித்து வழிகாட்டியமைக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். பொது மக்களுக்கு உன்னத சேவையை வழங்குவதற்கும் மற்றும் பொது துறையின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் தொழில் திணைக்களத்தின் ஒவ்வொருவரும் வலுவானவராகவும், தைரியமானவராகவும் மற்றும் அதிஷ்டமுடையவராகவும் இருப்பதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எம். டி. சாந்தனி அமரதுங்க**
*தொழில் ஆணையாளர் அதிபதி*
*தொழில் திணைக்களம்*

## மேலதிக தொழில் ஆணையாளர் நாயகத்தின் செய்தி

தொழில் திணைக்களத்தின் ஒவ்வொரு வருடத்தினதும் செயற்பாடுளை சரியாக விளங்கிக் கொள்வதற்கு தொழில் திணைக்களத்தின் வருடாந்த அறிக்கை மிகவும் முக்கியமானதாகும். இன்றிலிருந்து 100 வருடங்களின் பின்னர் யாராவது ஒருவர் 100 வருடங்களுக்கு முன்னர் இத்திணைக்களத்தினால் என்ன செய்யப்பட்டது என்பதனை அறிவதற்கு இவ் அறிக்கை ஒர் பெறுமதியான மூலமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

எனது பொதுத் துறைச் சேவையின் ஆரம்ப காலங்களில் பிரதேச அலுவலகங்களில் சேவையாற்றச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதனால், காலணித்துவக் காலத்திலிருந்து பொதுத் துறையின் நிர்வாக அறிக்கைகளை வாசிப்பதற்கான அதிஷ்டம் எனக்குக் கிடைத்துள்ளது. பொதுத் துறையின் கடந்த காலத்தைப் பற்றிய அறிவை நான் பெற்றுக் கொண்டேன் என்பதுடன் இப்படிப்படியான அபிவிருத்தியும் மற்றும் இந்த தகவல்களும் எனது தொழிலுக்கு மிகவும் உதவியுள்ளது. பிரசுரிப்புக் குழுவின் தலைவர் என்ற வகையில் தொழில் திணைக்களத்தின் வருடாந்த அறிக்கையைத் தயாரிப்பதில் நான் தலையிட்டுள்ளேன். தேவையான தகவல்களைக் கொண்ட விரிவான அறிக்கை ஒன்றை எங்களால் தரமுடியும் என்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன் அத்துடன் தொழில் திணைக்களத்தால் செய்யப்பட்ட பணிகள் பற்றிய விபரங்களை ஒருவர் அறிந்து கொள்ள வேண்டியிருப்பின் கடந்த வருடங்களின் அறிக்கைகள் போதுமான தகவல்களைக் கொண்டிருக்கவில்லை என நான் நினைக்கின்றேன்.

சிறந்த சேவையை வழங்கியதற்கும் மற்றும் இவ் அறிக்கையை வெற்றிகரமாக ஆக்க உதவியதற்கும் தொழில் திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களையும் பாராட்டக் கிடைத்த சந்தர்ப்பமாக கருதுகின்றேன்.

**சி. என். விதானாச்சி**
*மேலதிக தொழி ஆணையாளர் நாயகம்*
*தொழில் திணைக்களம்*

# 1. தொழில் திணைக்களம்

1923 இன் 01 ஆம் இலக்க இந்தியக் குடிவரவுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி இந்தியக் குடியேற்றத் தொழிலாளர்களின் கட்டுப்பாட்டாளர் திணைக்களம் என்ற வகையில் தொடங்கிய தொழில் திணைக்களமானது, ஆரம்பத்தில், இலங்கையின் பெருந்தோட்டங்களுக்கு குடியேற்ற ஆட்சியாளரால் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தொழிலாளர்களது நலன்புரி நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டிருந்தது.

அதன் பிரகாரம், தொழில் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள், இலங்கையின் சட்டவாக்கத் துறையினால், 1923 தொடக்கம் 93 வருடங்களாக ஏற்படுத்தப்பட்ட தொழில் சட்டங்களையும் கட்டளைச் சட்டங்களையும் அவற்றின் பிந்திய திருத்தங்களையும் அமுல்படுத்துதல், மற்றும், தொழிலாளர் – தொழில்கொள்வோர் மற்றும் அரசாங்கம் ஆகிய முத்தரப்பினரது உறவைப் பேணுவதன் அடிப்படையில் தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துதல் ஆகியனவாகும்.

தற்போது, தொழில் திணைக்களமானது, அதிகூடிய நிறுவன உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கில், தனியார்துறை மற்றும் அரச சார்புள்ள நிறுவனங்களின் தொழிலாளர் - தொழில்கொள்வோர் உறவு மற்றும் நலன்புரி விடயங்களைக் கையாளும் முக்கியமான அரசாங்க நிறுவனமாக மாறியுள்ளது.

திணைக்களத்தின் நோக்கும் செயற்பணியும்

**நோக்கு**

சர்வதேசப் போட்டிப் பொருளாதார நிலைமையில் நீடித்து நிலைக்கும் தொழிற் சமாதான சூழலைக் கொண்டதொரு நாடு

**செயற்பணி**

நிலைத்ததொரு கைத்தொழில் சமாதானத்துடன் ஒரு சீரிய வெலைச்சூழலை உருவாக்குவதனூடாக இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாட்டுக்குப் பங்களித்தல்

**திணைக்களத்தின் வகிபாகம்**

- உழைக்கும் தொழிலாளர் சமூகத்தினது நலனுக்காகவும், தொழிற் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்காகவும் உருவாக்கப்பட்ட சட்டங்களையும் கட்டளைச் சட்டங்களையும் அமுல்படுத்துதல்
- வேலையாட்களுக்கான சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்
- தொழில் துறைகளில் அளவீடுகளை மேற்கொள்ளுதல், தொழில் துறையினதும் உழைக்கும் சமூகத்தினதும் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் செயற்றிட்டங்களை அடையாளங் காணுதல், திட்டமிடுதல், உள்ளக மற்றும் வெளியக அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல், கல்விரீதியான நிகழ்ச்சிகளை நடாத்துதல்
- தொழில் துறையில் உள்ள உரிய தரப்பினரிடையே சமூகக் கலந்துரையாடலை ஊக்குவித்தல்
- தொழில் துறைக்குரிய தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், முன்வைத்தல்
- தொழிற் சங்கங்களுடன் தகுந்த மற்றும் சிறந்த உறவுகளைப் பேணுதல்
- சர்வதேச தொழில் தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி என்ற வகையில் செயற்படும் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சுடன் இணைந்து செயலாற்றுதல்

திணைக்களத்தின் தற்போதைய நிலைமை

தற்போது, நாட்டில் சமாதானமானதொரு தொழில் சூழலைத் தாபிப்பதற்காகவும், உழைக்கும் சமூகத்தினரின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலுள்ள 13 பிரதான பிரிவுகள் செயற்படுகின்றன. உழைக்கும் சமூகத்தினரது சட்டரீதியான பாதுகாப்பு மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டு, திணைக்கள நடவடிக்கைகளைப் பன்முகப் படுத்துவதன் கீழ் 11 பிராந்திய தொழில் அலுவலகங்களும், 40 மாவட்ட தொழில் அலுவலகங்களும், 17 உப தொழில் அலுவலகங்களும், 10 மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதனைப் பொறியிலாளர் அலுவலகங்களும் நாடு பூராகவும் அமைக்கப்பட்டுள்ளன. தொழில் திணைக்களத்தின் முழுப் பதவியணியினரும் 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் 2400 ஆகும்.

# திணைக்களத்தின் நிறுவகக் கட்டமைப்பு



# 2. தொழில் அமைதி

நாட்டில் ஒரு சுமுகமான தொழில் அமைதியைப் பேணுதல் இலங்கையின் உள்ளூர்ப் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு மிக முக்கியமானது. வேலைத்தலங்களில் தொழிலாளர் – தொழில்கொள்வோர் இடையேயான பரஸ்பர நம்பிக்கையும் ஒத்துழைப்பும் வேலைநிறுத்தங்களற்ற, பிணக்குகளற்ற நாளாந்த வேலைக்கு இட்டுச் செல்லும் என்பதுடன், அந்த நிலைமையானது நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குரிய அடிப்படை விடயமாகவும் இருக்கும்.

### தொழிற் பரிசோதனைகள்

தொழிற் பரிசோதனைச் செயற்பாடானது, நாட்டில் நடைமுறையிலுள்ள தொழிற் சட்டங்களின் மற்றும் கட்டளைச் சட்டங்களின் கீழ் தொழிலாளர் – தொழில்கொள்வோர் தரப்புகளின் மீது நிரந்தரத் தன்மையைச் சுமத்தியுள்ளது. அதன் பிரகாரம், தொழில் அமைதியானது தொழிற் பரிசோதனைச் செயற்பாட்டினூடாக ஏற்படுத்தப்பட முடியும் என்பதுடன், தொழிற் பரிசோதனைச் செயற்பாடானது வேலைத்தல விபத்துக்களைக் குறைப்பதற்கு, உரிய சம்பளங்களையும் சேவை நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு, ஓய்வு பெற்றதன் பின்னரான சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு உதவுகிறது.

பின்வரும் வரைபுகள் கடந்த ஐந்து வருட காலத்தினுள் திணைக்கள அலுவலர்களால் நடாத்தப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கையையும், அறிவிக்கப்பட்ட தொழில் பிணக்குகளின் எண்ணிக்கையையும் காட்டுகின்றன.







முந்தய வருடங்களுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில், தொழில் அலுவலர்களின் பல வெற்றிடங்கள் காணப்பட்டன அதே போல் தொழில் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தங்களின் காரணமாகப் பல சவால்களை இறுதிக் கால் ஆண்டில் எதிர் கொண்டபோதும் தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத் தக்க வளர்ச்சியை காணக் கூடியதாக இருந்துள்ளது. சமூகக் கலந்துரையாடல் மற்றும் தொழில் சட்டங்கள் ஒழுங்கு விதிகள் தொடர்பான அறிவை சமூகத்தின் மத்தியில் மேம்படுத்தியமை என்பவற்றினூடாக வேலைத்தல கூட்டுறவு, தொழில் சட்டங்களின் வினைத்திறனுடைய அமுல்படுத்துகையின் விளைவாக தற்பொழுது தொழிற் பிணக்குகளின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டுள்ளது.

## சட்டச் செயற்பாடுகள்

தொழில் திணைக்களத்தின் சட்டத்தைச் செயற்படுத்தும் பிரிவானது தொழிற் சட்டங்களை முறையாக அமுல்செய்வதனூடாக தொழில் அமைதியை நிறுவுதலை இலக்காகக் கொண்டுள்ளது. அதன் பிரகாரம் திணைக்களத்தால் அமுல்படுத்தப்படுகின்ற தொழிற் சட்ட ஏற்பாடுகளை மீறுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளைச் சட்டத்தைச் செயற்படுத்தும் பிரிவு கைக்கொள்கிறது. அதனூடாக, தொழிலாளர் – தொழில்கொள்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதுடன் அவர்களுக்கிடையிலான ஒத்துழைப்புகளையும் மேம்படுத்துகிறது.

**சட்டத்தைச் செயற்படுத்தும் பிரிவினது பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு:**

- ❖ தொழிற் சட்டங்களை அமுல்படுத்தும்போது ஏற்படக்கூடிய சட்டப் பிரச்சினைகள் தொடர்பாக, திணைக்களத்தின் அலுவலர்களுக்கு அவசியமான அறிவுறுத்தல்களை வழங்குதல்.
- ❖ தொழிற் சட்டங்களுக்கு அமைந்து நடக்கத்தவறும் தொழில்கொள்வோருக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கிடுதலும், அவ்வழக்குகளுக்கான எழுத்திலான சமர்ப்பணங்களைத் தயாரித்தலும், அவ்வழக்குகளின் விசாரணைகளில் பங்கேற்றலும் ஊடாக அவற்றை நடாத்துதல்.
- ❖ நாடு பூராகவுமுள்ள நீதிவான் நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகளுக்கான அழைப்பாணைகள் மற்றும் பிடியாணைகள் ஆகியவற்றைக் கண்காணித்தலும் நடைமுறைப்படுத்துதலும்.
- ❖ நீதிவான் நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு எதிரான மேன்முறையீடுகளுக்குத் தேவையான ஆவணங்களைத் தயாரித்தலும், சட்ட மா அதிபதி திணைக்கள அலுவலர்களுடன் சேர்ந்து அவற்றில் தோற்றுதல்.
- ❖ தொழிற் சட்டங்களின் கீழ் திணைக்கள அலுவலர்களால் எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக மாகாண மேல் நீதிமன்றங்களிலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் செய்யப்படும் ஆணைகோரும் விண்ணப்பங்கள் தொடர்பில் தேவையான ஆவணங்களைத் தயாரித்தலும், சட்ட மா அதிபதி திணைக்கள அலுவலர்களுடன் சேர்ந்து அவற்றில் தோற்றுதலும்.
- ❖ வரையறுக்கப்பட்ட கம்பனிகள் மூடப்படும்போது, கம்பனிகள் சட்டத்தின் கீழ் கொடுப்பனவுகளைச் செய்கையில், அவற்றால் செலுத்தப்பட வேண்டியிருக்கும் சட்டபூர்வக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்காக மாவட்ட நீதிமன்றங்களிலும் வணிக மேல் நீதிமன்றங்களிலும் தொடரப்படும் வழக்குகளில் இடையீடு செய்தல்.
- ❖ திணைக்களத்தின் தொழிற் சட்டங்களை அமுல்படுத்தும் அலுவலர்களுக்கான பயிற்சிநெறிகளை நடாத்துதல்.
- ❖ தற்காலத் தேவை கருதி புதிய தொழிற் சட்டங்களை உருவாக்குவதிலும், ஏற்கனவே உள்ள தொழிற் சட்டங்களைத் திருத்துவதிலும் ஈடுபடுதல்.

**சட்டத்தைச் செயற்படுத்தும் பிரிவானது பல தொழிற் சட்டங்களையும் கட்டளைச் சட்டங்களையும் கையாள்வதுடன், அவற்றில் பிரதானமானவை பின்வருமாறு:**

- ❖ பணிக்கொடைச் சட்டம்
- ❖ கைத்தொழில் பிணக்குகள் சட்டம்
- ❖ தொழிலை முடிவுறுத்தும் சட்டம்
- ❖ சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்
- ❖ கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டம்
- ❖ தொழில் நியாயசபைகளின் கட்டளைகள்
- ❖ ஊழியர் சேமலாப நிதியச் சட்டம்
- ❖ மகப்பேற்று நன்மைகள் கட்டளைச் சட்டம்
- ❖ தனியார் சேமலாப நிதியச் சட்டம்
- ❖ பெண்கள், இளையோர் மற்றும் சிறுவர்களை வேலையில் அமர்த்துதல் சட்டம்

இதன் பிரகாரம், உரிய சட்டங்களின் கீழ் 2016 ஆம் ஆண்டினுள் தொடரப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 4899 ஆகும் (ஒவ்வொரு சட்டத்தின் கீழும் தொடரப்பட்ட வழக்குகள் பற்றிய தகவல் புள்ளிவபரங்களாகத் தரப்பட்டுள்ளன).

**நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:**

| நீதிமன்றம் | 2015 இலிருந்து முன்கொணரப்பட்ட வழக்குகள் | 2016 இல் ஆரம்பிக்கப்பட்ட வழக்குகள் | 2016 இல் முடிவுறுத்தப்பட்ட வழக்குகள் |
|---|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 124 | 29 | 05 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 283 | 33 | 15 |
| மேல் நீதிமன்றம் | 109 | 87 | 29 |
| மாவட்ட நீதிமன்றம் மற்றும் வணிக மேல் நீதிமன்றம் | 247 | 10 | - |
| நீதிவான் நீதிமன்றம் | 240 | 97 | 135 |

## தொழில் உறவுகள்

தொழில் உறவுகள் பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாவன, பொருளாதார உற்பத்தி, அபிவிருத்தி மற்றும் உற்பத்தித்திறனை உயர் நிலைக்குக் கொணருதல், ஊழியர் – தொழில்கொள்வோர் உறவைப் பாதுகாத்து, நிறுவனங்களில் தொழில் அமைதியைப் பேணுதல் என்பனவாகும்.

**இதன் பிரகாரம், இப்பிரிவினது பிரதான இலக்குகளாவன பின்வருமாறு:**

- ❖ பொருளாதார உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்குத் தேவையான தொழில் அமைதியை உருவாக்குதல்.
- ❖ தொழில் சட்டங்களினதும் கட்டளைச் சட்டங்களினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் சேவைகளுக்கான நியதி நிபந்தனைகளைப் பாதுகாத்தல்.
- ❖ கூட்டு ஒப்பந்தங்களை ஊக்குவித்தலும் பதிவு செய்தலும்.
- ❖ தொழிற் பிணக்குகளையும் வேலைநிறுத்தங்களையும் ஆகக்குறைந்த அளவுக்குக் கொண்டுவருதல்.
- ❖ தொழிற் சங்கங்களைப் பதிவுசெய்வதனூடாக அவற்றைச் சட்ட ஆட்களாக மாற்றுதல்.

தொழில் உறவுகள் பிரிவானது பிரதானமாக 1950 இன் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டம், 1971 இன் 45 ஆம் இலக்க வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம், 1935 இன் 14 ஆம் இலக்க தொழிற்சங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம் ஆகியவற்றைக் கையாள்கின்றது.

2016 ஆம் ஆண்டில் தொழில் உறவுகள் பிரிவிற்கு முன்வைக்கப்பட்ட 2476 தொழிற் பிணக்குகளில், 2076 தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டில் இந்தப் பிரிவிற்கு அனுப்பப்பட்ட 160 முறைப்பாடுகளுள் 86 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

**2016 ஆம் ஆண்டின் வேலைநிறுத்தங்கள்**

2016 இல், மொத்த எண்ணிக்கையாக 55 வேலைநிறுத்தங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இவற்றில் 28672 ஊழியர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். இந்த வேலைநிறுத்தங்களின் காரணமாக இழக்கப்பட்ட மனித உழைப்பு நாட்களின் மொத்த எண்ணிக்கை 141991 ஆகும்.

## விசேட புலனாய்வுகள்

தெற்காசிய வலயத்தில் அதிகூடிய தொழிற் சமாதானத்துடன் கூடிய நாடாக இலங்கை திகழ வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் தொழிற்படும் விசேட புலனாய்வுகள் பிரிவின் வகிபாகமானது பின்வருமாறு:

- தொழிற் சட்டங்களினதும் அவற்றின் ஏற்பாடுகளினதும் அமுல்படுத்தலை நோக்காகக் கொண்டு, விசேட புலனாய்வுகளையும் அவசர விசாரணைகளையும் நடாத்துதல்.
- தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர் அதிபதி மற்றும் மேலதிக தொழில் ஆணையாளர் அதிபதி ஆகியோரால் முன்வைக்கப்படும் அவர்களுக்குக் கிடைத்த முறைப்பாடுகள் மீது உடனடி நடவடிக்கைகளை எடுத்தல்.
- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அரசாங்க குறைகேள் அதிகாரி அலுவலகம், பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்கள், பாராளுமன்றத்தின் பொது முறைப்பாட்டுக் குழு போன்ற நிறுவனங்களால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு உரிய பதில்களை அனுப்புதல்.
- திணைக்களத்தின் மற்றைய பிரிவுகளுடன் ஒன்றிணைந்து கூட்டுப் புலனாய்வுகளை நடாத்துதல்.
- பொதுமக்களது முறைப்பாடுகள் தொடர்பாக வலய, மாவட்ட, உப தொழில் அலுவலகங்களிடமிருந்து அறிக்கைகளைக் கோருதல்.
- சட்டரீதியான கொடுப்பனவுகளுக்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2016 இல், இந்தப் பிரிவிற்கு நேரடியாக 407 முறைப்பாடுகள் கிடைத்ததுடன், முன்னைய வருடத்தில் முன்கொணரப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கையுடன் சேர்த்து மொத்தமாக 1045 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அதன்படி, இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் 522 புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

# 3. சமூகக் கலந்துரையாடலும் வேலைத்தலக் கூட்டுறவும்

சமூகக் கலந்துரையாடலுக்கும் வேலைத்தலக் கூட்டுறவிற்குமான அலகு, தனியார் துறையிலும் அரச சார்புத் துறையிலும் உள்ள நிறுவனங்களில் தொழிலாளர், தொழிற்சங்கம், வேலைகொள்வோர் ஆகிய பிரிவினரிடையே சமூகக் கலந்துரையாடலைப் பிரபல்யப்படுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்கிறது. மேலும், தொழிற் பிணக்குகளைக் குறைத்து, கூட்டு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுவதற்கான அவசியமான அறிவுறுத்தல்களையும் வழங்குகின்றது.

சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவு என்பவற்றினால் தொழில் அமைதியைத் தாபிப்பதனூடாகப் பொருளாதார முன்னேற்றத்தை அடைவதை நோக்காகக் கொண்டு இந்தப் பிரிவு செயற்படுகிறது.

இந்த நோக்கத்தைச் செயற்படுத்துவதற்காக, நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடாத்துவதனூடாக இந்த அலகானது ஒரு வசதியளிப்பவராகவும் மத்தியஸ்தம் வகிப்பவராகவும் தொழிற்படுகிறது. இவ்வாறான நிகழ்ச்சிகளிடையே சமூகக் கலந்துரையாடலையும் வேலைத்தலக் கூட்டுறவையும் ஊக்குவிக்கும் அறிவூட்டும் நிகழ்ச்சிகளே முக்கியமானவை. 2016 இல் நடாத்தப்பட்ட இவ்வாறான நிகழ்ச்சிகள் பின்வருமாறு:

| நிகழ்ச்சிகள் | நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகள் | பங்குபற்றியோர் |
|---|---|---|
| நிறுவனங்களிலான பயிற்சிப்பட்டறை | 60 | 3307 |
| முகாமையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் | 10 | 525 |
| அரசசார்புத்துறை நிறுவனங்கள் | 12 | 651 |
| பிராந்திய ஆலோசனைக் குழுக்கள் | 10 | 267 |
| மாவட்ட ஆலோசனைக் குழுக்கள் | 40 | 1381 |
| மாவட்ட அலுவலகத்தின் கீழான நிறுவனங்கள் | 36 | 1303 |
| உப அலுவலகத்தின் கீழான நிறுவனங்கள் | 12 | 420 |

மேலுள்ள நிழ்ச்சிகளுக்கு மேலதிகமாக, சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தள கூட்டுறவு பிரிவானது, சமூகக் கலந்துரையாடல் மற்றும வேலைத்தள கூட்டுறவு என்னும் கருப்பொருளை மேம்படுத்தும் பொருட்டு பல நிகழ்ச்சிகளை நடாத்தி அக்கருப்பொருள் சரியாகக் கடைப்பிடிக்கப்படுகின்றதா என்பதனை மதிப்பீடு செய்வதற்குமாக சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தள கூட்டுறவவின் மீதான போட்டிகள் நாடளாவிய ரீதியில் வருடந்தோறும் இப்பிரிவினால் நடாத்தப்படுகின்றது. இதன் பிரகாரம், இந்த ஆண்டு இப்போட்டிகள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டு வெற்றியாளர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன. சமூகக் கலந்துரையாடலின் அதி உயர் விருதுகள் வழங்கும் போட்டியானது, இரு பிரிவுகளாக நடாத்தப்பட்டது அவையாவன நிறுவனங்களில் சமூகக் கலந்'துரையாடலின் அமுல்படுத்துகை மற்றும் ஊழியர்களின் படைப்புத் திறமை என்பனவற்றை மதிப்பிடல் என்பனவாகும்.

மேலும், சமூகக் கலந்துரையாடல் மற்றும வேலைத்தள கூட்டுறவு செய்திகளை பரப்பும் குறிக்கோளுடன் “கதிகாவ” எனும் வருடாந்தச் சஞ்சிகை கூட 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இது சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தள கூட்டுறவுன் தொடர்பான கட்டுரைகள் மற்றும் கவிதைகளைக் கொண்டுள்ளது. இச் சஞ்சிகையின் மூலம், சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தளக் கூட்டுறவு துறையில் வல்லுநர்களிடமிருந்து இவை தொடர்பான கட்டுரைகள் மற்றும் கருத்துக்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் அத்துடன் சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தளக் கூட்டுறவின் ஊடாக அதி உயர் உற்பத்தித் திறனைப் மற்றும் வினைத்திறனைப் பெற்ற நிறுவனங்களிடமிருந்து அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளலாம் மற்றும் சமூகக் கலந்துரையாடற்பிரிவின் செய்திகளை நாடு முழுவதும் பரப்ப முடியும்.

## 4. சம்பளங்கள் மற்றும் சேவை நிபந்தனைகள்

தொழில் திணைக்களத்தின் தொழில் தரப் பிரிவினது வகிபாகமானது, தனியார்துறை ஊழியர்களது தொழிற் பாதுகாப்பு மற்றும் நலன்புரி விடயங்களைப் பாதிக்கின்ற சேவை நிபந்தனைகள் குறித்த தரங்களை உருவாக்குதலும், அவ்வாறான தரங்களுக்கு சட்ட அந்தஸ்தை வழங்குதலும், மேற்பார்வை செய்தலுமே ஆகும்.

தொழிற் தரப் பிரிவானது, உற்பத்தித்திறன் மிக்க ஒரு சூழலை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு, பின்வரும் சட்டங்களையும் கட்டளைச்சட்டங்களையும் அமுல்படுத்துகிறது:

01 – 1947 இன் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

02 – 1954 இன் 19 ஆம் இலக்க, கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் (தொழில் மற்றும் ஊதியங்கள் முறைப்படுத்தல்) சட்டம்

03 – 2005 இன் 36 ஆம் இலக்க, வரவுசெலவுத் திட்ட நிவாரணப் படிகள் சட்டம்

04 – 2016 இன் 03 ஆம் இலக்க, தேசிய ஆகக்குறைந்த சம்பளச் சட்டம்

05 – 2016 இன் 04 ஆம் இலக்க, வரவுசெலவுத் திட்ட நிவாரணப் படிகள் சட்டம்

இதன் பிரகாரம், 2016 இல் பின்வரும் நிகழ்ச்சிகள் தொழில் தரப் பிரிவால் நடைமுறைப்படுத்தப்பட்டன:

- ❖ பொறியியல் துறை, தைத்த ஆடைகள் உற்பத்தித் துறை, துணி உற்பத்தித் துறை ஆகியவற்றுக்கு சம்பளச்சபைகளை உருவாக்கி விஸ்தரிப்பதற்கான உரிய செயற்பாடுகள்.
- ❖ 22 சம்பளச்சபைகளுக்குரிய பிரதிநிதிகளை நியமித்தல்.
- ❖ ஊழியர்களுக்கும் தொழில்கொள்வோருக்கும் அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- ❖ வரவுசெலவுத் திட்ட நிவாரணப் படி தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- ❖ 2016 இன் 04 ஆம் இலக்க வரவுசெலவுத் திட்ட நிவாரணப்படி சட்டத்திற்கமைவாகவும், 2016 இன் 03 ஆம் இலக்க தேசிய ஆகக்குறைந்த சம்பளச் சட்டத்திற்கமைவாகவும் உரிய கொடுப்பனவுத் தொகைகளை புதினப் பத்திரிகைகளில் வெளியிடுதல்.
- ❖ அறிவித்தல்களை வெளியிடுதல்.
- ❖ 05 வேலை நாட்கள் வாரம் தொடர்பான அங்கீகாரத்தை வழங்குதல்.
- ❖ கூட்டு ஒப்பந்தங்கள் தொடர்பான சட்டரீதியான நிலவரத்தை பரிசோதனைகளின் பின்னர் அறிக்கையிடல்.
- ❖ கப்பல் துறை, துறைமுகம், கப்பற் போக்குவரத்து தொழிலுக்கான சம்பளச்சபையினது கட்டளைகளுக்கான ஆட்சேபணைகளைக் கோருதல்.
- ❖ இறப்பர் வளர்த்தலுக்கான சம்பளச்சபையின் சேவை நிபந்தனைகளைத் தயாரித்தலும் அதன் கட்டளையைப் பிரசுரித்தலும்.
- ❖ சம்பளச்சபைகளின் பிரதிநிதிகளது பங்குபற்றலுக்கான கொடுப்பனவுகளை அதிகரித்தலும் அதற்கான அறிவித்தலை வர்த்தமானியில் பிரசுரித்தலும்.

2016 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையில் செயற்பாட்டிலிருந்த சம்பளச்சபைகளின் பட்டியல் பின்வருமாறு:

01 – தேயிலை பயிரிடல் மற்றும் உற்பத்தித் தொழில்
02 – கொக்கோ, ஏலம், மிளகு பயிரிடுதல் உற்பத்தித் தொழில்
03 - இறப்பர் பயிரிடல் மற்றும் உற்பத்தித் தொழில்
04 – தென்னை பயிரிடல் தொழில்
05 – பொறியியல் தொழில்
06 – அச்சிடல் தொழில்
07 – தேயிலை ஏற்றுமதித் தொழில்
08 - இறப்பர் ஏற்றுமதித் தொழில்
09 – மதுபானம், விநாகிரி உற்பத்தித் தொழில்
10 – தீப்பெட்டி உற்பத்தித் தொழில்
11 – தெங்கு உற்பத்தித் தொழில்
12 – கட்டிடத் தொழில்
13 – பீடி உற்பத்தித் தொழில்
14 – போறணைத் தொழில்
15 – செங்கல் மற்றும் ஓடு உற்பத்தித் தொழில்
16 – ஐஸ், குளிர்பானம், பழச்சாறு உற்பத்தித் தொழில்
17 – தும்பு மெத்தை, சிலிர்த்த தும்பு ஏற்றுமதித் தொழில்
18 – ஆடை உற்பத்தித் தொழில்
19 – மேசு வகை உற்பத்தித் தொழில்
20 – நெல்குற்றும் தொழில்
21 – துணி உற்பத்தித் தொழில்
22 – விசுக்கோத்து, இனிப்பு வகைகள் உற்பத்தித் தொழில்
23 - இறப்பர் (ரயர், ரியூப் உற்பத்தி, ரயர் மீளப் புனைதல் உட்பட) பிளாஸ்ரிக், பெற்றோலியம் றெசின் பொருட்கள் உற்பத்தித் தொழில்
24 - தோல் பதனிடுதலும் பாதணிகள் மற்றும் தோற் பொருட்கள் உற்பத்தித் தொழில்
25 – மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழில்
26 - இறால் வளர்ப்பு மற்றும் இறால் ஏற்றுமதித் தொழில்
27 – கற்குழி மற்றும் கருங்கல் உடைக்கும் தொழில்
28 – காரீயத் தொழில்
29 – கறுவாத் தொழில்
30 - புகையிலைத் தொழில்
31 – சுருட்டு உற்பத்தித் தொழில்
32 – மலர்கள், அலங்காரத் தாவரங்கள், காய்கறி, பழங்கள் பயிரிடுதல் மற்றும் ஏற்றுமதித் தொழில்
33 – மோட்டார் போக்குவரத்துத் தொழில்
34 – சினிமாத் தொழில்
35 – ஆதூலர் மனைத் தொழில்
36 – உணவுச் சாலை மற்றும் உணவு வழங்கல் தொழில்
37 – பாதுகாப்புச் சேவைத் தொழில்
38 – பத்திரிகையாளர் தொழில்
39 – சில்லறை மற்றும் மொத்த விற்பனைத் தொழில்
40 - கப்பல் துறை, துறைமுகம், கப்பற் போக்குவரத்துத் தொழில்
41 – சுத்தீகரிப்புச் சேவைத் தொழில்
42 – பத்திக் தொழில்
43 – கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழில்
44 – ஆரம்பப் பாடசாலைச் சேவைத் தொழில்

# 5. சமூகப் பாதுகாப்பு

இலங்கையின் உழைக்கும் சமூகத்தினரது ஓய்வு வாழ்க்கையைப் பாதுகாக்கும் நோக்குடன், மிகவும் கவர்ச்சிகரமான சமூகப் பாதுகாப்புத் திட்டம் என்ற வகையிலான நோக்கத்தையும் கொண்ட, 1958 ஜூன் 01 ஆம் திகதி தாபிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியமானது, ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும்.

ஊழியர் சேமலாப நிதியத்தால் ஆற்றப்படும் பிரதான செயற்பாடுகளாவன, நிறுவனங்களையும் ஊழியர்களையும் பதிவு செய்தலும், தொழில்கொள்வோரிடமிருந்து பங்களிப்புகளை அறவிடுதலும், அவ்வாறு பங்களிப்புகளை வழங்காதோருக்குரிய அவ்வாறு வழங்கக் கோரும் கட்டளைகளைப் பிறப்பித்தலும், நிதியத்தை ஊக்குவிப்பதற்கான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துதலும் ஆகும்.

நிதியத்தின் நிர்வாகமானது தொழில் ஆணையாளர் அதிபதியால் மேற்கொள்ளப்படும் அதேவேளை, நிதியை இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபை கையாளுகிறது.

2016 ஆம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவுசெய்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை 7178 ஆகும்.

### பங்களிப்புகளைச் சேகரித்தல்

ஒரு குறித்த மாதத்தின் பங்களிப்பானது உரிய தொழில்கொள்வோரால் இலங்கை மத்திய வங்கியில் அடுத்து வரும் மாதத்தின் கடைசித் தினத்திற்கு முன்பதாக, சட்டத்தால் உள்ளடக்கப்படும் ஊழியர்களது பெயரில் வைப்பிடப்பட வேண்டும்.

**கடந்த 5 வருடங்களினுள் பங்களிப்புகளது சேகரிப்பு பற்றிய விபரம் பின்வருமாறு:**



2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதிய நன்மைக் கொடுப்பனவுகளின் மொத்தத் தொகை ரூ. 108,393 மில்லியன் ஆகும். இதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நன்மைக் கொடுப்பனவு விண்ணப்பங்களின் எண்ணிக்கை கிழே தரப்பட்டுள்ளன.

| **நன்மைக் கொடுப்பனவின் வகை** | **விண்ணப்பங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| சாதாரண கொடுப்பனவு | 123900 |
| மரணித்த அங்கத்தவரது கொடுப்பனவு | 4551 |
| 30% நன்மைக் கொடுப்பனவு | 59348 |

### ஊழியர் சேமலாப நிதிய அறவீடும் கணனிமயமாக்கலும்

தற்போது, ஊழியர் சேமலாப நிதிக்கான பங்களிப்புகளை வினைத்திறனுடன் அறவிடுவதற்காக, பல்வேறு செயற்பாடுகளும் பிராந்திய அலுவலகங்களுக்குப் பரவலாக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம், வடக்கு, வட மத்திய, கிழக்கு, வட மேற்கு, மத்திய, ஊவா, சபரகமுவ, தெற்கு, மற்றும் மேற்கு வலயம் II (களுத்துறை) ஆகிய வலய அலுவலகங்களில் பங்களிப்புக் கண்காணிப்பு முறைமையானது நிறுவப்பட்டுள்ளது.

கைவிரலடையாளப் பதிவு முறைமை நிறுவப்பட்டதனூடாக ஊழியர் சேமலாப நிதி நன்மைக் கொடுப்பனவுகளை மேலும் வினைத்திறன் மிக்கதாக ஆக்க முடிந்துள்ளது. இதன்படி, 25381 அங்கத்தவர்களது கைவிரலடையாளங்கள் தலைமை அலுவலகத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளன. தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக, 20 தொழில் அலுவலகங்களில் கைவிரலடையாளப் பதிவு முறைமை நிறுவப்பட்டுள்ளது.

### தனியார் சேமலாப நிதியங்களை மேற்பார்வை செய்தல்

2016 ஆம் ஆண்டின் இறுதியில், தனியார் சேமலாப நிதிகளுக்குப் பங்களிப்புச் செய்யும் மொத்த நிறுவனங்களும் அவற்றின் ஊழியர்களும் முறையே 152 மற்றும் 192284 ஆகும்.

### ஓய்வு பெறுவதற்கு முன்பாக ஊ.சே.நி. நன்மைகளில் 30% கொடுப்பனவு பற்றிய செயற்பாடுகள்

ஊழியர் சேமலாப நிதியமானது ஓய்வு பெற்றதன் பின்பு என மட்டுப்படுத்தப் படாமல் ஓய்வு பெறுவதற்கு முன்பாகவே ஓய்வுக்கான நன்மைகளின் ஒரு பகுதியை, வீடொன்றைக் கட்டுவதற்காக அல்லது மருத்துவ தேவைக்காகப் பெற்றுக்கொள்வதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்குகிறது. இது ஆரம்பிக்கப்பட்ட 27-05-2015 தொடக்கம் 31-12-2016 வரையான காலப்பகுதிக்குள் 30% ஓய்வுக்கு முன்னதான நன்மைக் கொடுப்பனவுகளின் முன்னற்றம் பின்வருமாறு:

| | |
|---|---|
| மாவட்ட அலுவலகங்கள் தவிர்ந்த தலைமை அலுவலகத்தால் மாத்திரம் தகுதியைப் பரீட்சிப்பதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 96851 |
| கொடுப்பனவைச் செய்வதற்காக இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 72128 |
| இலங்கை மத்திய வங்கியால் விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்ட தொகை | ரூ. 33,658 மில்லியன் |

## நிதியத்தை ஊக்குவித்தலும் வினைத்திறன் மிக்க அபிவிருத்திச் செயற்றிட்டங்களும்

ஊழியர் சேமலாப நிதியம் பற்றிய சரியான அறிவு இன்மையால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காக, நிதியத்தின் அங்கத்தவர்களையும் தொழில்கொள்வோரையும் அறிவூட்டும் நோக்கத்துடன், 2016 இல், 225 தடவைகள் தொலைக்காட்சி விளம்பரங்கள் காட்டப்பட்டதுடன், 3216 தடவைகள் வானொலி விளம்பரங்கள் ஒலிபரப்பப்பட்டன.

மேலும், உத்தியோகபூர்வ கடமைகளை இலகுவாக்குவதற்கும் வினைத்திறன் மிக்கதாக ஆக்குவதற்கும் ஓர் அலுவலகக் கையேடு உருவாக்கப்பட்டு, ஊழியர் சேமலாப நிதிய அலுவலர்களது வினைத்திறன் உயர்த்தப்பட்டது.

# 6. தொழில்சார் பாதுகாப்பும் சுகாதாரமும்

விபத்துகள் மற்றும் அபாயகரமான நிலைமை அற்றதொரு வேலைச் சூழலானது, ஊழியர்களது வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் அகிகரித்து, உற்பத்திப் பொருட்களினதும் சேவைகளினதும் தரத்தையும் அதிகரிக்கும். எனவே, தொழில் திணைக்களமானது வேலைத்தலங்களில் தொழில்சார் விபத்துக்களையும் தொழில்சார் நோய்களையும் அதிகுறைந்த அளவில் வைத்திருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

1942 இன் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம், வேலையாட்களுக்கு தெழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை வழங்குதலானது ஒரு கட்டாயமான சட்டத் தேவையாகும்.

### தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்கான உலக தினம்

தொழில் திணைக்களமானது, ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 28 ஆம் திகதியன்று வருகின்ற தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்கான உலக தினத்தை நினைவுகூருமுகமாக, கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் தேசிய நிகழ்ச்சியை நடாத்தியது.

### தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தை அனுட்டிப்பதற்கான தேசிய வைபவம் கொழும்பு 02 இலுள்ள எல்ரயர் கட்டிட நிர்மாணத்திற்கான இடத்தில் நடாத்தப்பட்டது.

### சட்டத்தை அமுல்படுத்துதல்

தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறிய 13 தொழில்கொள்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### தொழில்சார் சுகாதாரம்

தொழில் திணைக்களமானது, தொழில் ரீதியான நோய்களுக்கான காரணிகளையும் அறிகுறிகளையும் ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறிவதற்காக, தொழில் சூழலைப் பரிசோதிப்பதற்கான சுற்றாடல் பரிசோதனைகளையும், உயிரியல் ரீதியான சோதனைகளையும் நடாத்துகிறது.

தொழிற் சூழலில் வேலையாளர்கள் அபாயகரமான உயிரியல் பொருட்களால் பாதிக்கப்படலாம். எனவே, வேலையாட்களின் உடல்நலத்தைப் பாதுகாப்பதனை நோக்காகக் கொண்டு, அவ்வாறான உயிரியல் பொருட்களை ஆரம்பத்திலேயே அடையாளங் காண்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றது. இவ்வாறாகச் செய்யப்பட்ட உயிரியல் பரிசோதனைகளின் எண்ணிக்கை 1283 ஆகும்.

தனியார்துறையிலுள்ள உற்பத்திகள் மற்றும் சேவை வழங்கும் தாபனங்களைச் சேர்ந்த வேலையாளர்களுக்கு தொழில்சார் சுகாதாரம் தொடர்பான அறிவூட்டும் நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

# 7. பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரம்

தொழிலில் அமர்ந்துள்ள பெண்கள் இலங்கையின் உற்பத்தித் துறைக்கு அளப்பரிய பங்களிப்பை வழங்குவதுடன், அவர்களைப் பாதுகாப்பது தொழில் திணைக்களத்தின் பொறுப்பாகவும் உள்ளது. மேலும் அவர்களுக்குரிய தொழிற் பாதுகாப்பு, சுகாதார மற்றும் நலன்புரி விடயங்கள் ஆகியவற்றையும் பாதுகாக்க வேண்டியுள்ளது.

மேலும், நாட்டின் இரத்த ஓட்டமாகக் கருதப்படத்தக்க சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டி, தொழில் திணைக்களமானது சிறுவர்களைத் தொழிலில் அமர்த்துதலை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. தொழிலில் அமர்த்துவதற்கான வயதை அடையாத சிறுவர், அபாயகரமான தொழில்களில் அமர்த்தப்படும் இளையோர் ஆகியோர் தொடர்பில் அவ்வாறு செய்யும் வேலைகொள்வோருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொளவதற்காக, திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவு தொழிற்படுகிறது.

### சர்வதேச பெண்கள் தினம்

சர்வதேச பெண்கள் தினமானது இரத்தினபுரி மாவட்டத்தில் தேயிலை மற்றும் இறப்பர் சிறு தோட்டங்களில் வதியும் பெண்களுக்கான (காலணிகள் தயாரித்தல், சிறு உணவுகள் தயாரித்தல், முகம் மற்றும் தலை அலங்காரம், உணவுக்கான காளான் வளர்த்தல், அலங்காரச் செடிகள் மற்றும் மலர்கள் பயிரிடுதல்) சுயதொழில் பயிற்சி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் இரத்தினபுரி, தர்மபால வித்தியாலயத்தில் வைத்து நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அவர்களுக்கான சுயதொழில் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

2016 இல் பின்வரும் நிகழ்ச்சிகளும் பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவினால் நடாத்தப்பட்டன:

| நிகழ்ச்சியின் பெயர் | நிகழ்ச்சிகளின் / பயிற்சிப்பட்டறைகளின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் |
|---|---|---|
| பெருந்தோட்டப் பெண்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சிகள் | 2 | பெருந்தோட்டங்களிலிருந்தான 60 பெண்கள் |
| தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெண்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சிகள் | 10 | தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெண்கள் |
| ஏற்றுமதி அபிவிருத்தி வலயங்களில் வேலை செய்யும் பெண்களுக்கான உளவியல் சார்ந்த ஆலோசனை வழங்கல் நிகழ்ச்சிகள் | உளவியல் சார்ந்த ஆலோசனை வழங்கல் நிகழ்ச்சிகள் 04 | கட்டுநாயக்க, பியகம, கொக்கல வலயங்களைச் சேர்ந்த 30 பெண் தொழிலாளர்கள் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பங்குபற்றினர் |
| போதை மருந்துப் பாவனையை தடுப்பதற்கான நிகழ்ச்சிகள் | 03 | சுதந்திர வர்த்தக வலய பெண் தொழிலாளர்கள் |

2016 இல் பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவினால் முறைப்பாடகள் தொடர்பிலான பின்வரும் வகைகளிலான விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டன:

| விசாரணையின் தன்மை | நடாத்தப்பட்ட விசாரணைகளின் / பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| இரவு நேர வேலைக்கான அனுமதி | 79 விசாரணைகள் மாவட்ட அலுவலகங்களுடன் சேர்ந்து | அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. |
| பெண்களின் இரவு நேர வேலை தொடர்பான முறைப்பாடுகள் | 01 | அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. |
| மகப்பேற்று நன்மைகள் தொடர்பான முறைப்பாடுகளும் பரிசோதனைகளும் | 06 | முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு, உரிய அலுவலகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் அவசியமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. |
| பெண்களது வேலைகள் தொடர்பான முறைப்பாடுகளும் பரிசோதனைகளும் | 07 | உரிய மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டு, உரிய அறிவுறுத்தல்களும் கொடுக்கப்பட்டன. |

### சிறுவர் தொழிலுக்கு எதிரான உலக தினம்

சிறுவர் தொழிலுக்கு எதிரான உலக தினம், சருவதேச தொழில் தாபனத்தின் அனுசரணையுடன், கௌரவ மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி அவர்களது பிரதான பங்குபற்றுதலுடன், பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப குழு அறையில் வைபவரீதியாக நடாத்தப்பட்டது.

இதன் குறிக்கோளானது, தேசிய மட்டத்தில் சிறுவர் தொழிலைப் பூச்சிய மட்டத்திற்குக் கொண்டுவருதலும், அபாயகரமான தொழில்களில் இளையோரை ஈடுபடுத்துதலைத் தடுத்தலும் ஆகும்.

இந்த வைபவத்தின்போது சிறப்பு நிகழ்வுகளாக சத்தியப் பிரமாணமொன்றை வாசித்துக் கையொப்பமிடுதல், கைத்தொலைபேசிகளுக்கு சிறுவர் தொழிலுக்கு எதிரான செய்தியொன்றை சிறு அறிவிப்பாக அனுப்புதல் ஆகியன இடம்பெற்றன.

